டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 25.08.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 056 - Madurai | Online Edition00

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் எள் விதைப்புக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு

கோயம்புத்தூர், ஆக.24

உலகிலேயே எள் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து மியான்மர் மற்றும் சூடான் நாடுகள் உள்ளன. 2024-ஆம் ஆண்டில் உலகளாவிய எள் உற்பத்தி சுமார் 6.7 மில்லியன் டன்களாக இருந்தது. இதில் இந்தியா 0.87 மில்லியன் டன்களை (உலக உற்பத்தியில் 12.93%) உற்பத்தி செய்தது.அடுத்தடுத்த இடங்களில் மியான்மர் (0.72 மில்லியன் டன்கள் - 10.75%) மற்றும் சூடான் (0.63 மில்லியன் டன்கள் - 9.40%) ஆகியவை உள்ளன. மதிப்பு அடிப்படையில் தென் கொரியா, அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகியவை இந்திய எள் ஏற்றுமதிக்கான முக்கிய சந்தைகளாக உள்ளன.

இந்தியாவில் பயிரிடப்படும் முக்கியமான எண்ணெய் வித்துப் பயிர்களில் எள்ளும் ஒன்றாகும். இது உயர்தர சமையல் எண்ணெய் மற்றும் சத்துக்கள் நிறைந்த பண்புகளுக்காகப் பெரிதும் மதிக்கப்படுகிறது. இந்தியாவில் காரீஃப் மற்றும் ராபி ஆகிய இரு பருவங்களிலும் எள் பயிரிடப்படுகிறது. இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் இரண்டாவது முன்மதிப்பீடுகளின்படி (2025-26), நாட்டின் எள் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி முறையே சுமார் 9.90 லட்சம் ஹெக்டேர் மற்றும் 3.66 லட்சம் டன்களாகவும், உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 369 கிலோவாகவும் இருந்தது. மேற்கு வங்கம், குஜராத், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை எள் சாகுபடி செய்யும் முக்கிய மாநிலங்களாகும்.

தமிழ்நாட்டில், 2024-25 ஆம் ஆண்டில் சுமார் 0.47 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் எள் சாகுபடி செய்யப்பட்டு, 0.34 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 428 கிலோவாக இருந்தது. தமிழ்நாட்டில் கள்ளக்குறிச்சி, ஈரோடு, கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கரூர் மற்றும் அரியலூர் ஆகியவை எள் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

வறட்சியைத் தாங்கி வளரும் திறன் கொண்ட பயிர் என்பதால் இம்மாநிலத்தில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. வெள்ளை மற்றும் கருப்பு ஆகிய இரு வகையான எள் விதைகள் மிகவும் பிரபலமானவை என்றாலும், சிவப்பு முதல் பழுப்பு நிறம் வரையிலான பிற வகைகளும் உள்ளன. எண்ணெய் எடுப்பதற்குப் பழுப்பு மற்றும் கருப்பு நிற விதைகள் விரும்பப்படுகின்றன, அதே வேளையில் வெள்ளை எள் முக்கியமாக இனிப்பு மற்றும் தின்பண்டங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது.

இச்சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் ’உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு’, ஈரோடு மாவட்டம் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 25 ஆண்டுகளாக நிலவிய எள் விலைகளை ஆய்வு செய்துள்ளது. இந்த ஆய்வின் முடிவுகளின்படி, அறுவடை காலத்தில் தரமான கருப்பு எள்ளின் விலை கிலோவுக்கு சுமார் ரூ.140 முதல் ரூ.145 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. வர்த்தகத் தகவல்களின்படி, பருவ மழையின் போக்கு மற்றும் எள் பயிரிடும் பிற மாநிலங்களிலிருந்து வரும் வரத்தின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து விலை நிலவரங்கள் மாறுபடலாம். எனவே, விவசாயிகள் இதற்கேற்ப தங்கள் விதைப்பு முடிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சந்தைப்படுத்தல் தொடர்பான விவரங்களுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு,வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 0422-2431405, மின்னஞ்சல் : tn-demic@gmail.com தொடர்பு கொள்ளலாம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வணிகமுறையிலான காய்கறி மற்றும் பழப்பொருட்கள் தயாரித்தல் பயிற்சி

கோயம்புத்தூர், ஆக.24

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வணிகமுறையிலான காய்கறி மற்றும் பழப்பொருட்கள் தயாரித்தல் பயிற்சி 27.08.26 மற்றும் 28.08.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (பேருந்து நிறுத்தம் : மருதமலை சாலை) நடைபெறும். கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அவையாவன

- உலர வைக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள் (Dehydrated vegetables and fruits)
- பலவகை பழ ஜாம் (Mixed fruit jam)
- பழரசம் (Squash)
- தயார் நிலை பானம் (Ready - to - serve beverage)
- ஊறுகாய் (Pickles)
- ஊறுகனி (Candy)
- பழப்பார் (Fruit bar)
- தக்காளி கெட்சுப் (Tomato Ketch up)

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 ரூ முளுகூ 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**21. மட்டன் எலும்பு சூப்**

**தேவையான பொருட்கள்**

மட்டன் எலும்பு — 500 கிராம்

பூண்டு — 10 பல்

மிளகு — 2 டீஸ்பூன்

சீரகம் — 1 டீஸ்பூன்

உப்பு

**செய்முறை**

அனைத்தையும் குக்கரில் நன்றாக வேக வைத்து வடிகட்டி சூடாக பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி



சிவகங்கை, ஆக.24

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டாரத்தில் உள்ள சவேரியார் பட்டினம் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்ட 40 விவசாயிகளுக்கு அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் மூலம் இயற்கை விவசாயம் குறித்த விவசாயிகள் பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் கமலாதேவி, தலைமையிலும், முத்தையா துணை வேளாண்மை அலுவலர் முன்னிலையிலும் இப்பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சிக்கு வருகை புரிந்த அனைவரையும் துணை வேளாண்மை அலுவலர் வரவேற்றார். மண்ணின் வளத்தையும் மனித இனத்தையும் பாதுகாக்க இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் பயன்பாட்டினை குறைத்து இயற்கை உரங்கள் இயற்கை பூச்சி விரட்டிகள் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் நஞ்சற்ற உணவு தானியங்களையும் காய்கறிகளையும் விவசாயிகள் உற்பத்தி செய்யலாம் என்று கூறினார். வேளாண்மை துறையின் மூலம் மானிய விலையில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் பாஸ்போ பாக்டீரியா பொட்டாஸ்பாக்டீரியா சிங் பாக்டீரிய ஆகியவைகளை பயன்படுத்தி ரசாயன உரங்கள் பயன்பாட்டை குறைக்க கேட்டுக் கொண்டார்.மேலும் சூடோமோனாஸ் டிவிடி போன்றவைகளை விதை நேர்த்தி மூலமும் மண்ணில் நேரடியாக இடுவதன் மூலமும் குலை நோய் போன்ற பூஞ்சான நோய்களை எளிதாக கட்டுப்படுத்தலாம். மேலும் நோய் எதிர்ப்பு தன்மை உள்ள பாரம்பரிய ரகங்களை பயன்படுத்தவும் உயிர் உரங்கள் உயிர் பூஞ்சான கொல்லி கொல்லிகள் மற்றும் இயற்கை பூச்சி விரட்டிகள் ஆகியவைகளை தயாரித்து பயன்படுத்தி நஞ்சில்லா உணவு உற்பத்தி செய்ய கேட்டுக் கொண்டார். மேலும் ஐந்திலை கரைசல் தயாரித்தல் பற்றியும் மீன் அமிலம் தயாரித்தல் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். பயிற்சியில் கலந்து கொண்ட உதவி வேளாண்மை அலுவலர் கிருஷ்ணவேணி, வேளாண்மை திட்டம் வேளாண்மை துறையின் திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் பற்றி எடுத்துரைத்தார். பயிற்சியினை வட்டார தொழில் நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி எஸ்தேர் உதவி தொழில்நுட்ப மேலாளர் அர்ச்சனா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

# பயறு வகைகளில் தன்னிறைவு இயக்கம் – விவசாயிகள் திறன் மேம்பாட்டு பயிற்சி




சிவகங்கை, ஆக.24

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரம், திருப்பாசேத்தி (சலுப்பனோடை) கிராமத்தில் (24.08.26) அன்று வேளாண்மைத் துறையின் கீழ் பயறு வகைகளில் தன்னிறைவு இயக்கம் (Mission for Aatmanirbharta in Pulses) விவசாயிகள் திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. திருப்புவனம் வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி வரவேற்புரை யாற்றினார். பயறுவகை சாகுபடியின் முக்கியத்துவம் மற்றும் பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்து மடக்கி உழுவதால் மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன் உரச்செலவு பெருமளவு குறைவதாகவும் தெரிவித்தார். மண்வள பாதுகாப்பு, பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து தொழில்நுட்ப உரையாற்றினார்.

இப்பயிற்சியில் சிவகங்கை இரா.பத்மாவதி, வேளாண்மை துணை இயக்குநர் (ம.தி) தலைமையேற்று தொடங்கி வைத்தார். பயறு வகை பயர்கள் தன்னிறைவு அடைய மண்மாதிரி ஆய்வு செய்தலின் முக்கியத்துவம் மற்றும் இரகத்தேர்வு, உயிர் உரங்களை பயன்படுத்தி விதைநேர்த்தி செய்தல் பற்றி எடுத்துக் கூறினார்.

வேளாண்மை அலுவலர் சந்திரசேகர், மண்மாதிரி எடுத்தல் அதன் அவசியம் குறித்தும் மேலும் உயிர் உரங்கள் அங்கக உரங்களை பயன்படுத்தி மண்ணின் வளத்தை காக்க வேண்டும் என்றும் நுண்ணூட்ட சத்தினை இடுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் எடுத்துரைத்தார். பிரகாஷ் (விரிவுரை யாளர்) அங்கக வேளாண்மையில் பயறுவகை பயறு சாகுபடி பற்றி எடுத்துக் கூறினார். விதைப்பண்ணை அமைப்பது பற்றி தங்கையா உதவி விதை அலுவலர் எடுத்துக்கூறினார். விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மாமரங்களில் கவாத்து மற்றும் குடை மேலாண்மை மூலம் அதிக மகசூல் பெறலாம்

## தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆலோசனை



திண்டுக்கல், ஆக.24

மா சாகுபடியில் மரத்தின் உயரம் மற்றும் கிளைகளின் அடர்த்தியை கட்டுப்படுத்தி சூரிய ஒளி மற்றும் காற்றோட்டம் கிடைக்கச் செய்வதன் மூலம் நல்ல தரமான காய்கள் மற்றும் சீரான மகசூலை பெற முடியும் என நத்தம் வட்டார தோட்டக் கலைத்துறை உதவி இயக்குநர் முகமது ஆஷிப் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் தெரிவித்துள்ளதாவது, மா மரங்களில் அறுவடை முடிந்த பிறகு தேவையற்ற உலர்ந்த, நோயுற்ற ஒன்றோடு ஒன்று உரசும் மற்றும் மரத்தின் உட்பகுதிக்குள் வளர்ந்துள்ள கிளைகளை அகற்றுவது முக்கியமானது. இப்பணியினை ஆகஸ்ட் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை உள்ள காலத்தில் மேற்கொள்ளலாம். குறிப்பாக அடர்த்தியாக வளர்ந்த கிளைகளை அகற்றுவதன் மூலம் மரத்தின் உட்பகுதிக்கும் போதிய வெளிச்சம், காற்றோட்டம் கிடைக்கும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின் படி அறுவடைக்கு பிந்தைய காலத்தில் கவாத்து மற்றும் குடை மேலாண்மையை மேற்கொள்வது மரத்தின் அளவைக் கட்டுப்படுத்தவும், பழங்களின் நிறம் மற்றும் தரத்தை மேம்படுத்த உதவும்.

**கவாத்து செய்ய வேண்டிய முக்கிய கிளைகள்**

உலர்ந்த மற்றும் நோயுற்ற கிளைகள், ஒன்றோடு ஒன்று குறுக்காக வளரும் கிளைகள், மரத்தின் உட்பகுதியை நோக்கி வளரும் கிளைகள், ஒன்றுடன் ஒன்று உரசும் கிளைகள், அதிகமாக அடர்த்தியாக வளர்ந்து காற்றோட்டத்தை தடுக்கும் கிளைகள், தேவையற்ற நீண்ட செங்குத்து கிளைகள். கவாத்து செய்யும்போது மரத்தின் இயற்கையான வடிவத்தை முழுமையாக மாற்றாமல், சமச் சீரான குடை அமைப்பை பராமரிப்பது அவசியம்.

விவசாயிகள், கவாத்து செய்யும் கருவிகளை சுத்தமாகவும் கூர்மையாகவும் பயன்படுத்தி கிளைகளை சரியான முறையில் அகற்ற வேண்டும். பெரிய கிளைகளை வெட்டும்போது அனுபவம் வாய்ந்த நிபுணர்களின் ஆலோசனையை பெறுவது நல்லது. மா மரத்தின் வயது, ரகம், நடவு இடைவெளி மற்றும் மரத்தின் தற்போதைய வளர்ச்சி நிலைக்கு ஏற்ப கவாத்து முறையை தேர்வு செய்வது அவசியம். நோயுற்ற கிளைகளை கண்டறிந்து வெட்டும் போது பாதிக்கப்பட்ட பகுதியை கடந்து ஆரோக்கியமான மரப் பகுதியிலும் போதுமான இடைவெளியுடன் வெட்ட வேண்டும். வெட்டிய கிளைகளை தோட்டத்திலேயே குவித்து வைக்காமல் அவற்றை அகற்றி அழிக்க வேண்டும். கவாத்துக்குப் பிறகு வெட்டுப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதற்காக ஒரு லிட்டர் தண்ணீரில் 3 கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு எனும் பூஞ்சானக் கொல்லி கலந்து நன்கு பூச வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மரத்தின் உயரத்தை கட்டுப் படுத்தி காய்கள் உருவாகும் பகுதிகளுக்கு சூரிய ஒளி சென்றடை வதை அதிகரிக்கலாம். இதனால் தெளிப்பு மருந்துகளை சீராகப் பயன்படுத்துதல், பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு, அறுவடை போன்ற பணிகளும் எளிதாகின்றன. இவ்வணுகுமுறையை விவசாயிகள் பின்பற்றினால் மா தோட்டத்தின் உற்பத்தி திறனை மேம்படுத்த முடியும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். மேலும் இது குறித்து காசம்பட்டி பகுதியில் உள்ள மா விவசாயிகளுக்கு வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் முகமது ஆஷிப் தலைமையில் துணை அலுவலர் ஜெகன்னாத் கவாத்து மற்றும் குடை மேலாண்மை குறித்த செயல்முறை விளக்கங்களை வழங்கினர். இதில் அப்பகுதியைச் சேர்ந்த மா விவசாயிகள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

## மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம் நடைபெற்றது

மதுரை, ஆக.24

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 21வது பார்த்தீனிய விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு வாரத்தில் ஐந்து நிலைய பயிற்சி மூலம் பார்த்தீனியத்தால் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து 435 விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப் பட்டது. மேலும் பார்த்தீனியம் களைகளை கட்டுப்படுத்தும் முறை களான அடர்ந்த உப்பு திரவம், களைக்கொல்லிகள் மற்றும்



உயிரியல் முறைகளை நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் கி.சுரேஷ் கல்லூரி மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இதில் 141 மாணவ–மாணவிகள் பங்கு பெற்றனர். இந்த ஒரு வார நிகழ்ச்சியினை நிலையத்தின் தலைவர் மற்றும் நிலைய விஞ்ஞானிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.



# சமச்சீர் உரப்பயன்பாடு குறித்த விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஆக.24

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) சார்பில், "Balanced Use of Fertilizers & Fertilizer Efficiency என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான பயிற்சி 24.08.26 அன்று ஈரோடு மாவட்டம், வரதநல்லூரில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு ம.கனிமொழி, வேளாண்மை உதவி இயக்குநர், பவானி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் சீனிவாசன், வேளாண் விஞ்ஞானி, பயிர்களுக்கு உரங்களை சமச்சீர் முறையில் பயன்படுத்துவதன் அவசியம், உரப்பயன்பாட்டின் திறனை அதிகரிக்கும் வழிமுறைகள் மற்றும் பயிர்களின் தேவைக்கேற்ப உரமிடுதல் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

மேலும், தினேஷ், உதவி பேராசிரியர், குமரகுரு வேளாண்மை கல்லூரி, பயிர்களின் வளர்ச்சி மற்றும் அதிக மகசூலுக்கு தேவையான நுண்ணூட்டச் சத்துக்கள், அவற்றின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடு குறித்து விவசாயி களுக்கு விளக்கமளித்தார். நிகழ்ச்சியின் நிறைவில் கோவிந்த ராஜன், வேளாண் வணிகம், நன்றியுரை வழங்கினார்.

இப்பயிற்சியை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கங்கா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சதீஷ்குமார், பூங்கோதை ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்திருந்தனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், சமச்சீர் உரப்பயன்பாடு, உரத்திறன் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் முக்கியத்துவம் குறித்த பயனுள்ள தொழில்நுட்பத் தகவல்களைப் பெற்றனர்.

# பார்த்தீனியம்
# ஒரு களைச் செடி - ஒரு பார்வை



வெளிநாட்டு வரவான பார்த்தீனியம் (PARTHENIUM HYSTEROPHORAS) இக்களை செடி (WEED) 70க்கும் மேற்பட்ட நாடுகளில், காணப்படு கிறது. இதனுடைய தாயகம் மத்திய அமெ குரிக்கா, மத்திய தெற்கு அமெரிக்கா மேற்கிந்திய தீவுகளாக உள்ளன.

**இது எப்படி இந்தியாவிற்கு பரவியது?. தெரியுமா?**

இது 1950களின் ஏற்பட்ட உணவு பஞ்சத்தின் போது, அமெரிக்காவின் உணவின் மூலமாக அமைதி திட்டத்தின்கீழ், கோதுமை தானியங்களுடன் இந்த களை செடியின் விதை களும் கலந்து வந்ததாக வரலாறு. கோதுமையின் மூலமாக நாடு முழுவதுமாக இந்த களை செடி (பார்த்தீனியம்) பரவியது.

**இந்தியாவில் எந்தெந்த மாநிலங்களில் அதிகமாக உள்ளது?**

இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் காணப்பட்டாலும், குறிப்பாக ஆந்திரா, பீகார், சட்டீஸ்கர், தில்லி, ஹரியானா, கர்நாடகம், ம.பி,, பஞ்சாப். தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் அதிகமாக உள்ளது.

**இதனுடைய உயிரியல் பண்புகள் என்னென்ன?**

இது அஸ்ட்ரேசியே (ASTERACEAE) குடும்பத்தை சார்ந்த தாவரம். 90-120 நாள் வாழக்கூடியது. சிறிய செடி வகையை சேர்ந்த ஒரு களைச்செடி. இதற்கு மூக்குத்தி பூண்டு, கோயம் புத்தூர் பூண்டு, காங்கிரஸ் களைச்செடி என பல பெயரில் அழைக் கப்படுகிறது. வறட்சி மற்றும் வெப்ப நிலையிலும் நன்றாக வளரக் கூடியது. பொதுவாக 0.5 முதல் 1.5 மீட்டர் வரை உயரம் வளரக் கூடியது. சூழ்நிலை ஏற்றதாக இருந்தால் 2 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது.

**தனது குறுகிய வாழ்நாளில் இரண்டு முக்கிய வளர்ச்சி நிலைகள் அவை எவை?**

1) இளம் பருவ நிலையில், பெரிய பச்சை நிறமுடைய ஆழமாக பிளவுபட்ட இலைகள் தரையோடு வட்டமாக காணப்படும். இந்நிலையில் பூக்கள் இருப்பதில்லை.

2) முதிர்ந்த இனப் பெருக்க நிலையில் அதிக கிளைகள் உருவாகி, வளர்ந்த இலைகள் மலர்கள் வலிமையான வேர் அமைப்பு உருவாகிறது.

**பரவுவதற்கான வழிமுறைகள்?**

இச்செடி ஆண்டு முழுவதும் மலரக்கூடியது. ஓரே பருவத்தில் இச்செடி 62.4 கோடி மகரந்த துகள்களுடன் உற்பத்தி செய்கிறது. அதுமட்டுமல்லாது கால்நடைகள் பிற விலங்குகள், வாகன இயக்கம், வெள்ள நீரின் ஓட்டம் போன்ற வாயிலாக பரவுகிறது. இந்த விதைகளுக்கு உறக்க நிலை (SEED DARMONCY) இல்லை. மண்ணில் போதுமான ஈரப்பதம் கிடைத்தவுடன் எந்த நேரத்திலும் முளைக்கும். மண்ணில் மேற்பரப்பில் உள்ள விதைகள் சுமார் 6 மாதங்கள் உயிரிப்புடன் இருக்கும். மண்ணில் புதைந்த விதைகள் 2 முதல் 15 ஆண்டுகள் வரை வீரியத்துடன் இருக்கும்.

**பார்த்தீனியத்தால் உண்டாகும் தீமைகள் என்ன?**

பார்த்தீனியத்தில் பார்த்தீனின், ஹிஸ்டெரிக், ஹைமெனின் போன்ற நச்சுத்தன்மை கொண்ட வேதிப் பொருட்கள் (CHEMICAL) மண்ணில் கலந்து மண்ணின் வேதியியல் தன்மையை மாற்று கின்றன. மண்ணில் உள்ள நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை பாதிக்கிறது. இதனால் உணவு உற்பத்தி குறையும். பல்வேறு வேளாண் பயிர்களில் 40% வரை மகசூல் இழப்பும் 90% வரை மேய்ச்சல் நிலங்களும் இதனுடைய ஆக்கிரமிப்பால் பாதிப்புக்கு உள்ளாகிறது என தரவுகள் உள்ளன. இதனை தொட்டால் மனிதர் களுக்கு அழற்சி, ஆஸ்துமா, வயிற்று போக்கு உள்ளிட்டவை ஏற்படுகின்றது.

**கட்டுபடுத்தும் முறை**

**1) உயிரியல் முறை :** மெக்சிகன் இலை உண்ணும் வண்டுகளை இந்த செடிகள் இருக்குமிடத்தில் விடலாம். ஆவாரை, அந்தி மந்தாரை போன்ற போட்டி தாவரங்களை விதைக்கலாம்.

**2) இயந்திர வியல் முறை :** உழவு செய்தல்

**3) வேதியியல் முறை :** அட்ரசின் கிளைபோசேட் போன்ற களைக்கொல்லிகளை தெளித்து கட்டுபடுத்தலாம். பூக்கள் பூக்கும் முன்னதாக உப்பு கரைசல் (சாதாரண உப்பு) தெளிக்கலாம்.

இந்தியாவை பொறுத்தவரை கர்நாடக அரசு தான் இதனை சட்டப்பூர்வமாக கட்டுபடித்திட நடவடிக்கை எடுத்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்க தகவல். இது தீங்கானது இதனை வளரவிட கூடாது என எச்சரிக்கை விடுத்துள்ளது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சத்தியமங்கலம் வட்டாரம் மலையடிப்புதூர் கிராமத்தில் அட்மா திட்ட பயிற்சி




ஈரோடு, ஆக.24

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரம், மலையடிப்புதூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் பண்ணை இயந்திரமயமாக்கல் குறித்த பயிற்சி சத்தியமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சரோஜா தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் அரசப்பன் ஓய்வு பெற்ற துணை வேளாண்மை இயக்குநர், பண்ணை இயந்திரமயமாக்கல் அவசியம் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார். மேலும் வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற் பொறியாளர் விஜயகுமார், வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் அதன் மானிய விபரங்கள் பற்றிம் விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சியளித்தார். மேலும் இ-வாடகை மூலம் வேளாண் இயந்திரங்கள் வாடகை விபரங்களை எடுத்து கூறினார்.

மேலும் வேளாண்மை அலுவலர் மிதுன், வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் திரவ உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் மண்வளம் மேம்பாடு குறித்து விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சியளித்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் சுதா, விவசாயிகளுக்கு அடையாள எண் பதிவு செய்வதன் முக்கியத்துவம் பற்றியும் பயிர் காப்பிடு திட்டம் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் கார்த்திக் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தினி செய்திருந்தனர். இப்பயிற்சியில் 50 மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# விவசாயிகளுக்கு e-NAM குறித்த பயிற்சி

தஞ்சாவூர், ஆக.24

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தனுஷ்யா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் ஷப்னா ஆகியோர், தங்களது கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம் குறுங்குளத்தில் விவசாயி களுக்கு e-NAM (Electronic National Agricul-ture Market) குறித்த பயிற்சி அளித்தனர்.



பயிற்சியில் e-NAM தளத்தின் நோக்கம், விவசாயிகள் தங்களது விளைபொருட்களை மின்னணு முறையில் சந்தைப் படுத்துவதன் மூலம் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெறும் விதம் மற்றும் பல்வேறு சந்தைகளின் விலை நிலவரங்களை அறிந்து கொள்ளும் முறைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், e-NAM–ல் பதிவு செய்தல், விளைபொருட்களை சந்தைப்படுத்துதல், ஏல முறையை அறிந்து கொள்ளுதல் மற்றும் விலைத் தகவல் களைப் பயன்படுத்தி சிறந்த சந்தை முடிவுகளை எடுப்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு வெளிப்படை யான விலை கிடைப்பதற்கும், சந்தைத் தகவல்களை எளிதாகப் பெறுவதற்கும் e-NAM பயன்படும் விதம் குறித்து மாணவிகள் நேரடிப் பயிற்சியுடன் விளக்கினர். இதன் மூலம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வேளாண் சந்தை வாய்ப்பு களை மேம்படுத்திக் கொள்ளும் முறைகளை விவசாயிகள் அறிந்து கொண்டனர்.

# சாகரிகா திரவம் - ஒரு பார்வை

சென்னை, ஆக.24

இப்கோ சாகரிகா திரவம், சிவப்பு மற்றும் பழுப்பு நிறக் கடற்பாசிகளில் இருந்து தயாரிக்கப்படும் ஒரு இயற்கையான பயிர் வளர்ச்சி ஊக்கி ஆகும். இது பயிர்களின் வேர் வளர்ச்சி, பூக்கள் மற்றும் காய்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், நோய் எதிர்ப்புத் திறனை மேம்படுத்தவும் உதவுகிறது.

**கிடைக்கும் அளவுகள்**

40 மில்லி, 100 மில்லி, 250 மில்லி, 500 மில்லி, 1,000 மில்லி, 5,000 மில்லி, 200 லிட்டர் டிரம் மற்றும் 1,000 லிட்டர் IBC (தனிப்பயனாக்கப்பட்ட பேக்குகளும் கிடைக்கின்றன)

**பயன்படுத்தும் அளவு**

**1. இலைவழித் தெளிப்பு**

1 லிட்டர் தண்ணீருக்கு 2.5 5 மில்லி சாகரிகா திரவம் (0.25 0.5%) கலந்து தெளிக்கவும்.

ஒரு ஹெக்டேருக்கு 1 2 லிட்டர் சாகரிகா திரவம்.

ஒரு ஏக்கருக்கு ஒரு முறை தெளிப்பதற்கு 500 மில்லி சாகரிகா திரவம் போதுமானது.

**2. அனைத்து வயல் மற்றும் தோட்டப் பயிர்களுக்கும்**

முதல் தெளிப்பு : பயிர் நிலைநிறுத்தும் பருவம் / உழவுப் பருவம்.

இரண்டாம் தெளிப்பு : பூக்கும் முன் பருவம்.

மூன்றாம் தெளிப்பு : பூத்த பின்பான பருவம்.

**3. விதை / நாற்றுப் நேர்த்தி**

1 லிட்டர் தண்ணீரில் 1 மில்லி சாகரிகா திரவம் (0.1%) கலந்து பயன்படுத்தவும்.

**நன்மைகள்**

வேர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது, பயிர் வளர்ச்சியை மேம்படுத்துகிறது, பூக்கும் திறனை அதிகரிக்க உதவு கிறது. காய் மற்றும் பழ உற்பத்தியை ஊக்குவிக்கிறது, பயிரின் எதிர்ப்புத் திறனை மேம்படுத்த உதவுகிறது, விளைச்சல் மற்றும் தரத்தை மேம்படுத்த உதவுகிறது.



# ஹேரன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் 21-வது பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்பட்டது



பெரம்பலூர், ஆக.24

பெரம்பலூர் ஹேரன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் 21-வது பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப் பட்டது. நாடு முழுவதும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் கீழ் செயல்படும் இயக்குநரகத்தின் அறிவுறுத்தலின்படி, வருடா வருடம் ஆகஸ்ட் 16 முதல் 22-ஆம் தேதி வரை பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. அதன்படி, ஹேரன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் பார்த்தீனியம் ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டன. இந்நிகழ்ச்சியில் பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த களைக் கொல்லிகளைப் பயன்படுத்துவது குறித்த செயல்விளக்கப் பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

பார்த்தீனியம் அமெரிக்காவிலிருந்து இந்தியாவில் ஊடுருவி உள்ள ஒரு நச்சுத்தன்மை கொண்ட களைச்செடியாகும். ஒரு பார்த்தீனியச் செடி சுமார் 25,000 முதல் 50,000 விதைகள் வரை உற்பத்தி செய்யக்கூடியது. இவ்விதைகள் காற்று, நீர் மற்றும் மனிதர்களின் மூலம் எளிதில் பரவி, வேகமாகப் பெருகுகின்றன. பார்த்தீனியத்தால் மனிதர்களுக்கு ஆஸ்துமா, தோல் அழற்சி போன்ற உடல்நலப் பாதிப்புகளும், கால்நடைகளுக்கு கருச்சிதைவு உள்ளிட்ட பாதிப்புகளும் ஏற்படக்கூடும். எனவே, பார்த்தீனியத்தை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்துவது அவசியம் என அறிவுறுத்தப்பட்டது.

குறைந்த அளவில் காணப்படும் பார்த்தீனியச் செடிகளை கையுறை அணிந்து பாதுகாப்பான முறையில் வேருடன் பிடுங்கி அகற்றலாம். அதிகளவில் காணப்படும் செடிகளை, பயிரிடுவதற்கு முன்பு, செடிகள் பூப்பதற்கு முன்னரே உரிய களைக்கொல்லி களைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். குறிப்பாக, க்ளைபோசேட், மெட்ரிபூசின் மற்றும் 2,4-டி போன்ற களைக்கொல்லிகளை

பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இதேபோல், வேளாண் இடுபொருள் விற்பனையாளர்கள் மற்றும் தந்தை ஹேன்ஸ் ரோவர் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களுக்கும் பார்த்தீனியத்தின் பாதிப்புகள் மற்றும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள், தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.




# கிளம்பாக்கம் கிராம விவசயிகளுக்கு மண் வள மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

திருவள்ளூர், ஆக.22

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் எல்லாபுரம் வட்டாரத்தில் உள்ள கிளம்பாக்கம் கிராமத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குனர் எல்லாபுரம் அ உமா மகேஸ்வரியின் ஆலோசனையின் கீழ் துணை வேளாண்மை அலுவலர் சிவகுமார், தலைமை தாங்கி பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் பற்றியும் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், மண் வள மேலாண்மை என்பது பயிர் விளைச்சலைத் தக்க வைப்பதற்காக மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது. தமிழ்நாட்டில், செம்மண் மற்றும் கருமண் வகைகள் அதிகமாக இருப்பதால், மண் தரம் குறைவதைத் தடுக்க ஒருங்ருகிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, அங்கக உரங்கள் மற்றும் வழக்கமான மண் பரிசோதனைகள் தேவைப்படுகிறது.

மேலும் விவசாயிகளுக்கு களர் மற்றும் உவர் தன்மை குறித்தும் விளக்கப்பட்டது பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூலைப் பாதிப்பதில் இந்த உவர்த்தன்மை மிகப் பெரும் பங்கு வகிக்கின்றது. அதிகப் படியான உப்புக்கள் மண்ணில் இருக்கும் பொழுது, தாவரங் களுக்குத் தேவையான சத்துக்கள் கிடைப்பதில்லை. எனவே பயிர் களின் வளர்ச்சி தடைபடுகிறது. அதிகப்படியான கால்சியம், மக்னீசயம், சோடியம் மற்றும் சல்பேட், நைட்ரேட், கார்பனேட் மற்றும் கை கார்பனேட், குளோரின் ஆகிய தாதுக்கள் மண்ணில் படியும் போது, மண் உவர்த்தன்மையை அடைகிறது. சோடியத்தின் அளவு நிலத்தில் அதிக அளவு காணப்பட்டால், அவ்வகை மண் உவர் மண். உவர் மண் மண்ணின் கார அமில நிலை (pH) 8.5 க்கு மிகாமவல் அமைந்திருக்கும், மண்ணின் சோடிய அயனிகளின் பரிமாற்றத்தின் அளவ 15 விழுக்காடுகளுக்கு கீழ் இருக்கும்.

களர் மண் அமில காரத்தன்மை (pH) 8.5 க்கு மேல் இருக்கும். மாறும் தன்மையுள்ள சோடியம் (Esp) 15 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கும். உவர் களர் மண் நீரில் கரையும் உப்புக்கள் அதிக மாகவும், சோடியம் அயனிகளின் பரிமாற்றுத் திறன் 15 சதவீதத் திற்கு அதிகமாகவும் இருக்கும்.

மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சி.பாஸ்கர் பேசுகையில் பசுந்தாள் உரப்பயிர், இயற்கை இடுபொருட்கள் பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், அமிர்தக்கரைசல், மீன் அமினோ அமிலங்கள் மற்றும் பூச்சி விரட்டி தயாரித்தல் குறித்தும் விளக்கி கூறினார். மேலும் மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண் மாதிரியின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கி கூறினார். இந்த பயிற்சியில் கலந்துக்கொண்ட அணைத்து விவசாயிகளுக்கும் சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டது.

வேளாண் கண்காட்சியாக உயிர் உரங்கள், நெல், நுன்னுட்ட கலவைகள், பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் முக்கியத்து வத்தினை பற்றியும் உயிர் உரத்தின் மூலம் விதை நேர்த்தி செய்தல் குறித்தும் வேளாண்மை உதவி அலுவலர் முருகன் எடுத்து கூறினர். மேலும் இந்த பயிற்சிக்கு கருத்துக்காட்சிக்கு தேவையான அணைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜெயபிரசாத் செய்திருந்தார்.

# பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை : கண்டுணர்வு சுற்றுலாவில் விவசாயிகள்



திருச்சி, ஆக.24

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரத்தில் வேளாண் துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பின் கீழ் தேசியப் பயறுவகை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையம், வம்பனிற்கு இரண்டு நாள் கண்டுணர்வு சுற்றுலாவிற்காக 40 விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பயணத்தினை வேளாண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவி தொடங்கி வைத்தார்.

இக்கண்டுணர்வு சுற்றுலாவின் முதல் நாள் வகுப்பிற்கு தேசிய பயிறு வகை ஆராய்ச்சி நிலையம் பேராசிரியர் மற்றும் தலைவர் மாரிமுத்து கலந்து கொண்டு பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய தொழில்நுட்பங்களான

நிலம் தேர்வு, விதை தேர்வு, பருவங்களுக்கு ஏற்ற ரகம் தேர்வு செய்தல் போன்ற தொழில்நுட்பம் பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். தொழில்நுட்ப வல்லுனர் ராதாகிருஷ்ணன் பயிற்சியில் கலந்து கொண்டு சமச்சீர் உர மேலாண்மை என்பது பயிரின் தேவை, மண்ணின் வளம் மற்றும் தட்பவெப்ப நிலை போன்றவற்றுக்கு ஏற்ப தழைச் சத்து, சாம்பல் சத்து, மணிச் சத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை சரியான விகிதத்தில் சரியான நேரத்தில் சரியான முறைகளில் பயன்படுத்தும் வழிமுறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

மேலும் மண்வளத்திற்கு ஏற்ப கரிம உரங்கள், உயிர் உரங்கள் ரசாயன உரங்கள் போன்றவற்றை தேவைக்கேற்ப மற்றும் மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் மண்வள அட்டையின் பரிந்துரைகளின் படி பயன்படுத்த வேண்டும். இதனால் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் மேம்படும் அதன் மூலம் தரமான மற்றும் அதிக விளைச்சல் கிடைக்கும். தேவையற்ற உரங்களின் பயன்பாடுகள் தவிர்க்கப்படுவதால் விவசாயிகளுக் கான செலவு குறையும் என்று விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்து கூறினார். இணை பேராசிரியர் ரமேஷ் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையில் காய்த்துளைப்பான், தண்டு ஈ மற்றும் வெள்ளை ஈ கட்டுப்படுத்தும் முறைகளை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இரண்டாம் நாள் பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் தமிழ்ச்செல்வன் முன்னிலையில் தொடங்கப்பட்டது. இதில் பார்த்தீனியம் களை கட்டுப்பாடு மற்றும் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் இடுவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் தழைச்சத்து மண்ணில் அதிகரிக்கலாம் அதன் மூலம் யூரியா மற்றும் அமோனியம் சல்பேட் போன்ற தழைச்சத்து உரங்களில் பயன்பாட்டை மெதுவாக குறைக்கலாம் போன்ற தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துக் கூறினார்.

பயிர் நோயியல் துறை உதவி பேராசிரியர் ராஜா ஜெகதீஷ் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த நோய் மேலாண்மையில் மஞ்சள் தேமல் நோய், வேர் அழுகல் மற்றும் வாடல் நோய் கட்டுப்பாடு முறை களைப் பற்றி விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துக் கூறினார். மேலும் இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது என கூறினர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபா தேவி மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர் பாபு செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விதை பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு

திருவள்ளூர், ஆக.24

விவசாயத்தில் அதிக மகசூல் மற்றும் தரமான விளைச்சலைப் பெறுவதற்கு தரமான விதைகளைத் தேர்வு செய்வது மிகவும் அவசியம். அந்த வகையில், விதைகளை விதைப்பதற்கு முன்பு விதை பரிசோதனை செய்வது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.



விதை பரிசோதனை மூலம் விதையின் முளைப்புத்திறன், தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற தரக்குறியீடுகளை அறிந்து கொள்ள முடியும். தரமற்ற அல்லது குறைந்த முளைப்புத்திறன் கொண்ட விதைகளைப் பயன்படுத்துவதால் பயிர்களின் எண்ணிக்கை குறைந்து, விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, விவசாயிகள் விதைகளை வாங்கும்போது அங்கீகரிக்கப்பட்ட விதை விற்பனை நிலையங்களில் இருந்து தரமான விதைகளை மட்டுமே வாங்க வேண்டும். விதை மாதிரிகளை விதை பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து, அதன் தரத்தை உறுதி செய்த பின்னர் சாகுபடிக்கு பயன்படுத்துவது சிறந்தது.

விதை பரிசோதனை செய்வதன் மூலம் தேவையற்ற விதைச் செலவைத் தவிர்த்து, சீரான பயிர் வளர்ச்சி மற்றும் அதிக மகசூலைப் பெற முடியும்.

எனவே, விவசாயிகள் விதை பரிசோதனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒவ்வொரு சாகுபடி பருவத்திலும் தரமான விதைகளைத் தேர்வு செய்து பயன்படுத்த வேண்டும் என வேளாண்மைத் துறை சார்பில் மூத்த வேளாண்மை அதிகாரி P.T. ராஜேஷ், திருவள்ளூர் விதை பரிசோதனை அலுவலகம் அறிவுறுத்துகிறார்.

# அக்வாசப் இன்ஜினியரிங் (Aquasub Engineering) தொழில்துறை களப்பயணம்



கோயம்புத்தூர், ஆக.24

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) கீழ் இயங்கும் கோயம்புத்தூர் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (AEC&RI), 56 பி.டெக். (வேளாண் பொறியியல்) பிரிவு மாணவர்களுக்கு, கோயம்புத்தூரில் உள்ள அக்வா குரூப் நிறுவனத்தின் ஒரு பகுதியான 'அக்வாசப் இன்ஜினியரிங்' நிறுவனத்திற்கு ஒரு தொழில்முறைப் களப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. நவீன உற்பத்தி முறைகள் மற்றும் விவசாயத்தில் அவற்றின் பயன்பாடுகள் குறித்த நேரடி அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, AEC&RI-யின் முதல்வர் டாக்டர் பெ. ராஜ்குமார் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியை அக்வாசப் இன்ஜினியரிங் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு மூத்த மேலாளர் வி.ஏ.சுரேஷ்குமார் ஒருங்கிணைத்தார். அவர் மாணவர்களுக்கு நிறுவனத்தின் பின்னணி, செயல்பாடுகள் மற்றும் தயாரிப்பு விவரங்கள் குறித்து அறிமுகம் செய்தார். இப்பயணத்தின் போது, ஸ்மார்ட் உற்பத்தி (smart manufacturing), தானியங்கி முறை (automation), ரோபோட்டிக்ஸ், இண்டஸ்ட்ரி 4.0 (Industry 4.0), ஆற்றல் திறன் கொண்ட பம்பிங் தீர்வுகள், VSD மற்றும் ஸ்மார்ட் கட்டுப்பாட்டு அமைப்புகள், மற்றும் நீர் ஓட்டம் (flow) மற்றும் உயரத்தின் (hea) அடிப்படையில் பம்பைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர். மேலும், பம்ப் சோதனை முறைகள், ஆற்றல் திறன் தேவைகள், யசிசி தரநிலைகள் மற்றும் ஆற்றல் குறியீட்டு முறை (energy labelling) குறித்தும் தெரிந்து கொண்டனர்.

மாணவர்கள் ASE யூனிட் 4-ன் பொது மேலாளர் யு.வி.ரவி மற்றும் API & ASE யூனிட் 2-ன் பொது மேலாளர் டி.திருமேனி ஆகியோரிடமிருந்து தொழில்நுட்ப வழிகாட்டுதல்களைப் பெற்றனர். இப்பயிற்சி நிகழ்ச்சியில் அக்வாசப் இன்ஜினியரிங் நிறுவனத்தைச் சேர்ந்த ராமபிரசாத் (பயிற்சி மற்றும் சேவை), ஜெகதீஷ் மற்றும் கிருஷ்ண பிரசாத் (ASE யூனிட் 4), நந்தகுமார் (பாதுகாப்பு மற்றும்

மின் பராமரிப்பு), மற்றும் நடராஜ் மற்றும் சாஹூல் (வடிவமைப்புத் துறை) ஆகியோர் தங்களது ஒத்துழைப்பை வழங்கினர். மாணவர்களுடன் சென்றிருந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறியியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆர்.மகேந்திரன் மற்றும் ஆர். திவ்யபாரதி (TA, REE) ஆகியோர், மாணவர்கள் தொழில்முறை நிபுணர்களுடன் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர். வகுப்பறையில் கற்ற பாடங்களை நிஜ உலகத் தொழில் நடைமுறைகளுடன் – குறிப்பாக ஆற்றல் திறன், தானியங்கி முறை மற்றும் மேம்பட்ட உற்பத்தித் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் – இணைத்துப் புரிந்துகொள்ள இப்பயணம் மாணவர்களுக்கு உதவியது.

